Draft

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 9

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை

**இணையத்தளம்: www.nie.lk** **மின்னஞ்சல் : info@nie.lk**

# Draft

**வரலாறு**
தரம் - 9
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2018

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

*பதிப்பு :*
*தேசிய கல்வி நிறுவகம்*

Draft

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

Draft

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

Draft

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, கலாநிதி மாபுள்கொட சுமணரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக்குழு

Draft

**வழிகாட்டலும் அனுமதியும்**

| | |
|---|---|
| கல்விசார் அலுவல்கள் சபை | தேசிய கல்வி நிறுவகம் |

**பாட ஒருங்கிணைப்பு**

| | |
|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**பாடநிபுணத்துவ சேவை**

| | |
|---|---|
| பேராசிரியர். மாலனி அந்தகம | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். இந்திராணி முணசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். பத்மசிரி கன்னங்கர | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | |
|---|---|
| கே.எஸ். ரஞ்சனி | ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், ஹொரணை |
| கோ.வீ.எஸ். விஜயமாலா | ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், களனி |
| எச்.எம். நளின் பண்டார | ஆசிரியர் சேவை, குருவிட்ட மத்திய மகா வித்தியாலயம், குருவிட்ட |
| அருட் சகோதரி மேரி டொனேட்டா | பிரதி அதிபர் (ஓய்வு நிலை) புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, வத்தளை |
| எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி. |
| ரெஸ்ட்டர் பிரியந்தி பெர்னாந்து | விஞ்ஞான உதவியாளர், தொல்பொருள் பட்டப்பின் நிறுவகம் |

**எழுத்தாளர் குழு (உள்வாரி)**

| | |
|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| டபிள்யூ.எஸ்.எஸ். குணவர்தன | உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**மொழிச் செவ்வையாக்கம்**

| | |
|---|---|
| திரு. எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி. |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

Draft

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக இருபத்து மூன்று தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும், அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் இரு பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரிச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். வரலாறு எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**- கலைத்திட்டக்குழு -**

# உள்ளடக்கம்

Draft

பக்கம்


| | | |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | v |
| கலைத்திட்டக்குழு | | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | | vii |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | | ix - xxii |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | | |
| அலகு 9.1 | இலங்கையின் கரையோரப் பிரதேசம் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் வருதல் | 03 - 08 |
| அலகு 9.2 | இலங்கையில் பிரித்தானியரது ஆட்சி | 09 - 13 |
| அலகு 9.3 | இலங்கையில் சமய, தேசிய மறுமலர்ச்சி | 14 - 16 |
| அலகு 9.4 | இந்திய சுதந்திரப் போராட்டம் | 17 - 22 |
| அலகு 9.5 | இலங்கையின் அரசியலமைப்பு சீர்த்திருத்தமும் தேசிய சுதந்திர இயக்கமும் | 23 - 28 |
| அலகு 9.6 | சுதந்திரத்தின் பின்னர் இலங்கை | 29 -33 |

Draft

# வரலாறு

# பாடத்திட்டம்

# தரம் 9

**(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

Draft

# அறிமுகம்

நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து, அதைப் பாதுகாத்து உலகின் நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டுப்பற்றுள்ள ஆற்றல் நிறைந்த இலங்கையரை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கலைதிட்டத்தில் கட்டாய மையப் பாடமாக 2007ம் ஆண்டு தொடக்கம் வரலாறு பாடம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்நோக்கத்தினை மேலும் அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த 2015ம் ஆண்டிலிருந்து புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் தேசிய இலக்குகள் மற்றும் தேசிய அடிப்படைத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, ‘வரலாறு’ பாடத்திற்கென இனங்காணப்பட்ட 23 தேர்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான ‘வரலாறு’ பாடக்கலைத்திட்டம் தேர்ச்சிகளை மையமாகக் கொண்ட முறையின் கீழ்த் தயாரிக்கப்பட்டுள்ளது.



9 ஆம் தரத்திற்கான இப்பாடத்திட்டம் இதன் விளைவாகும். 2017ம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் ஆறு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பட்டுள்ளது. இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கமும் அதன் விளைவுகளும், வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் சுதேசிகள் செயற்பாடுகள், சுயாதீனத்துக்காகப் போரிட்ட இந்திய சுதந்திரம், போராட்டமும் சுதந்திரமும் பெறலும் சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்களும் ஆகிய ஆறு கருப்பொருள்கள் கற்கைக்காக முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த ஆறு அலகுகளும் பாடசாலைத் தவணைகளுக்கமைவாகப் பிரிக்கப்பட்டுள்ள விதம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| தவணை | தேர்ச்சிகள் |
|---|---|
| I | 1, 2 |
| II | 3, 4 |
| III | 5, 6 |

# Draft

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 1 |
| உள்ளடக்கம் | 2 |
| தேசிய இலக்குகள் | 3 |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | 4 - 5 |
| வரலாறு - பாட நோக்கங்கள் | 6 |
| தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பாடக் குறிக்கோள்களுக்குமிடையிலான தொடர்புகள் | 7 |
| பாடத்திட்டம் | 8 - 12 |
| பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் | 13 |
| கணிப்பீடும் மதிப்பீடும் | 14 |
| பாடத்திட்டத் தயாரிப்புக் குழு | 15 |

Draft

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

iv. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

Draft

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



**(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

Draft

**IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**(VI).ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**(VII)"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

Draft

# வரலாறு - பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதால் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும்.
3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய பண்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

Draft

## தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பாடக் குறிக்கோள்களுக்குமிடையிலான தொடர்புகள்

| தேசிய பொதுக் குறிக்கோள்கள் | பாடக்குறிக்கோள்கள் | தேர்ச்சி மட்டம் |
|---|---|---|
| i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும். | 3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.<br>4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.<br>5. ஏனைய பண்பாடுகளுக்கு மதிப்பளித்தல். | 3.1 வெளிநாட்டு சக்திகளின் முன்னிலையில் தேசியத்துவத்தைக் காத்துக்கொள்வதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவார். |
| ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும், பேணுதலும். | 2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதால் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும். | 1.1 கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் செயற்பாடுகளை விசாரணை செய்வார். |
| iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும். | 1. வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.<br>2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதால் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும். | 5.1 இலங்கையின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சியை விசாரணை செய்வார். |
| vi. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல். | 6.1 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார வளர்ச்சியினை விபரிப்பார். |
| vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல். | 1.1 கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் செயற்பாடுகளை விசாரணை செய்வார்.<br>2.1 பிரித்தானியரது ஆட்சி இலங்கையில் நிலைநாட்டப்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>2.2 பிரித்தானியரது ஆட்சியில் பொருளாதாரச் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார். |
| viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | 7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல். | 4.1 இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தை விளக்குவார். |

# Draft

## வரலாறு - பாடத்திட்டம்
## தரம் 9

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 1.1 கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் செயற்பாடுகளை விசாரணை செய்வார். | 1. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் வருதல்<br>1.1 கரையோரப் பிரதேசங்களில் ஆட்சியை நிறுவுதல்<br>• ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள்<br>1.2 ஒல்லாந்தரின் ஆட்சி, பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள் | • கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர் கைப்பற்றிய விதத்தினை விபரிப்பார்.<br>• ஒல்லாந்தரின் கீழ் இருந்த பிரதேசங்களை இலங்கைப் புறவரிப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.<br>• மலைநாட்டு அரசுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கான காரணங்களை இனங்காண்பார்.<br>• நெகிழ்ச்சித்தன்மையின் மூலம் முரண்பாடுகளைக் குறைத்துக் கொள்ளத்தக்க விதத்தைப் பயில்வார்.<br>• கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் ஆட்சியை விபரிப்பார்.<br>• ஒல்லாந்தரின்கீழ் இலங்கையின் பொருளாதார, சமூக, பண்பாட்டு செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இலங்கைக்குக் கிடைத்த புதிய அம்சங்களை எடுத்துக்காட்டுவார். | 10 |

Draft

*தரம் 09*

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர் பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார். | 2.1 பிரித்தானியரது ஆதிக்கம் இலங்கையில் நிலை நாட்டப்பட்ட விதத்தைத் தெளிவு படுத்துவார். | 2. இலங்கையில் பிரித்தானிய ஆதிக்கம்<br>2.1 இலங்கைக்குப் பிரித்தானியரின் வருகையும், அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளலும்<br>• கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றல்<br>• 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தை கைப்பற்றல்<br>• 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்<br>• 1848 ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டம் | • பிரித்தானியரது ஆதிக்கம் இலங்கையில் நிறுவப்படுவதற்கான காரணங்களைத் தெளிவு படுத்துவார்.<br>• உள்நாட்டவரின் எதிர்ப்புக்களையும் அவற்றின் தன்மையையும் விளக்குவார்.<br>• தமது இறைமையைப் பாதுகாக்கும் பொருட்டுப் போராட்டங்களை முன்னெடுத்த தலைவர்களின் செயற்பாட்டை உயர்வாக மதிப்பார். | 10 |
| | 2.2 பிரித்தானியரது ஆட்சியின் கீழ்ப் பொருளாதார நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார். | 2.2 பிரித்தானியரின் கீழ் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி<br>• பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை<br>• உள்நாட்டு விவசாயத் துறையை மேம்படுத்துதல் | • வர்த்தகப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• பிரித்தானியரின் கீழ் உள்நாட்டு விவசாயக் கைத்தொழிலை விபரிப்பார்.<br>• பிரித்தானியரின்கீழ் இந் நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக் காட்டுவார். | |

Draft



| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 இலங்கையின் மரபுரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கை எடுப்பார். | 3.1 வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியப் பண்பாட்டைக் காத்துக் கொள்வதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவார். | 3. இலங்கையின் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி<br>• பௌத்த மறுமலர்ச்சி<br>• இந்து மறுமலர்ச்சி<br>• இஸ்லாமிய மறுமலர்ச்சி | • சமய, பண்பாட்டு எழுச்சியைத் தெளிவுபடுத்துவார்.<br>• வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத் தலைவர்களின் செயற்பாடுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• சுதேசப் பண்பாட்டைக்காக்கும் பொருட்டு தோள்கொடுத்த தலைவர்களை உயர்வாக மதிப்பார். | 08 |
| 4.0 பிராந்திய அரசியல் போக்குகளை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் இறைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 4.1 இந்திய தேசிய சுதந்திரப் போராட்டத்தில் அந்நாட்டு மக்கள் ஐக்கியப்பட்டுச் செயற்பட்ட விதத்தைக் கற்றாய்வார். | 4. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம்<br>• இந்தியாவில் ஐரோப்பியரின் செல்வாக்குகள்<br>• இந்தியா, பிரித்தானிய குடியேற்றமாதல்<br>• இந்திய சுதந்திரப் போராட்டம்<br>• சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்ற தலைவர்கள் | • பேரரசுவாதிகள் இந்தியாவில் அதிகாரத்தைப் பரப்பிய விதத்தை விளக்குவார்.<br>• இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தை விபரிப்பார்.<br>• இந்திய தேசிய சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் வெவ்வேறு இனத்தவர்கள் ஐக்கியப் பட்டுச் செயற்பட்ட விதத்தை மதிப்பார்.<br>• இந்திய தேசிய சுதந்திரப் போராட்ட இயக்கத்துடன் தொடர்புடைய நாட்டுப்பற்று மிக்கோரை முன்மாதிரியாகக் கொள்வார். | 10 |

# Draft

*தரம் 09*

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 இலங்கையின் பாராளு மன்ற முறையின் வளர்ச்சி யையும், அதன் பொருட்டுத் தேசியத் தலைவர்களின் பங்களிப்பையும் நுணுகி யாய்ந்து நாட்டின் ஜனநாயகத்தைப் பாது காத்துக் கொள்வதற்கு உதவுவார். | 5.1 இலங்கையின் பாராளு மன்ற முறையின் வளர்ச்சியை விசா ரணை செய்வார். | 5. இலங்கையின் அரசியல் சீர் திருத்தங்களும் தேசிய சுதந்திர இயக்கங்களும்<br>• கோல்புறூக் சீர்திருத்தம்<br>• இலங்கையரின் அரசியல் அமைப்பு ஆர்ப்பாட்டங்கள்<br>• 1910 மக்கலம் சீர்திருத்தங்கள்<br>• 1919 தேசிய சங்கம்<br>• 1920, 1924 யாப்புச் சீர்திருத்தங்கள்<br>• டொனமூர் சீர்திருத்தங்கள்<br>• சோல்பரி சீர்திருத்தங்கள் | • பிரித்தானியரின் கீழ் செய்யப் பட்ட அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களைத் தெளிவுபடுத் துவார்.<br>• அரசியல் அமைப்புச் சீர்திருத் தங்கள் தொடர்பாக இலங்கை யரின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுவார்.<br>• இலங்கையின் பாராளுமன்ற முறை படிப்படியாக வளர்ச்சி யடைந்தமையை எடுத்துக் காட்டுவார். | 10 |

Draft



| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 சுதந்திரத்தின் பின்னர் பெற்ற வெற்றிகளை மதித்து, ஒரு நற்பிரசை என்ற வகையில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பார். | 6.1 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார விருத்தியினைக் கற்றாய்வார். | 6. சுதந்திரத்தின் பின் இலங்கை<br>• சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள்<br>• ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் வேலைத்திட்டங்கள்<br>• அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்<br>- 1972<br>- 1978<br>• பொருளாதார விருத்தியும் சமூக நலனோம்பலும் | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை விபரிப்பார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் சமூக நலனோம்பல் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார். | 10 |

Draft

## (இ) பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

வரலாறு பாடப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாட விடயங்களை வெற்றிகரமாகவும் விளைதிறனுள்ளவாறும் கற்பதற்காகவும், அதன் மூலம் கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்காகவும் மாணவரது ஈடுபாடு அதிகரிக்கும் வகையில் பாடசாலை வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டுக் கொள்வது பெரிதும் பயனுடையதாகும்.

அவ்வாறான சில பாடசாலை வேலைத்திட்டங்கள் மாத்திரமே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான வேறு ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும், கொள்கைகளையும் திட்டமிட்டுப் பயன்படுத்தும் சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியருக்கு உண்டு என்பதைக் கவனத்தில்கொள்ளுங்கள்.

- ‘‘வரலாறு’’ சங்கமொன்று அமைப்பதன் மூலம் மாணவரது அறிவை விருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்துவதற்கும் சஞ்சிகை, சுவரேடு போன்ற ஆக்கபூர்வமமான கருமங்களில் ஈடுபடுவதற்கும் வழிப்படுத்தலாம்.
- வருடத்தில் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் முக்கியமான ஓர் இடத்துக்கு அல்லது பிரதேசத்துக்குக் கல்விச்சுற்றுலா செல்ல ஒழுங்குகளை செய்தல் வேண்டும். வகுப்பறையில் பெற்ற அறிவை உறுதிப்படுத்துவதற்காகவும், மேலும் விருத்தி செய்து செய்து கொள்வதற்காகவும் துணையாகுமாறு நேரகாலத்துடன் திட்டமிட்டு, கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நாட்டின் தலை சிறந்த வரலாற்றாசிரியர்களைப் பாடசாலைக்கு அழைத்து, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்.
- பிரதேசத்தில் தொல்பொருளியல் முக்கியத்துவமுள்ள நினைவுச்சின்னங்கள் பற்றித் தேடியறிவதோடு அவற்றைப் பாதுகாப்பதற்காக பாடசாலை மட்ட மற்றும் சமுதாய மட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடைய ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல் வேலைப்பாடுகள், ஏனைய அரும்பொருள்களை அவதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்குமாக அரும்பொருட்காட்சிச்சாலைகள் சார்ந்த வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடையதாக இணையத்தளங்கள் மூலம் தகவல்கள் திரட்டுதல்

Draft

## (ஈ) கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மாணவர் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தை இனங்காண்பதற்குமான வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தத்தக்க இடைத்தொடர்புகளைக் கொண்ட இரண்டு வேலைத்திட்டங்களாக கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கணிப்பீடு சரியாக நிகழுமெனனின் வகுப்பில் கற்கும் மாணவர்கள் எதிர்பார்க்கும் தேர்ச்சிகளில் கிட்டிய பாண்டித்திய மட்டத்தை எட்டுவது ஒரு கடினமான காரியமாகாது. மாணவன் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் யாது என்பதை இனங்காண்பதே மதிப்பீடு என்பதால் கருதப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்கள் தொடர்பாக இரண்டு விதமான வழிகாட்டல்களை வழங்கலாம். அவ்வழிகாட்டல்கள், பொதுவாக பின்னூட்டல் (Feed Back) எனவும் முன்முகவூட்டல் (Feed Forward) எனவும் அழைக்கப்படும். மாணவரது நலிவுகளைக் கண்டறிந்தவிடத்து, அவர்களது கற்றல் சார்ந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காகப் பின்னூட்டலையும் மாணவரது இயலுமைகளையும் வலிவுகளையும் இனங்கண்டவிடத்து அத்திறன்களை மேலும் விருத்தி செய்துகொள்வதற்காக முன்முகவூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் பணியாகும்.



கற்றல் - கற்பித்தல் செய்முறையின் வெற்றிக்காக, பாடத்தேர்ச்சிகளுள் எத்தேர்ச்சிகளை எந்தெந்த மட்டத்தில் அடைய முடிந்தது என்பதை மாணவர்கள் இனங்கண்டு கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் வழியே மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தைத் தீர்ப்புச் செய்வதே இங்கு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம், மாணவர் மைய, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் செயற்பாடுகள் சார்ந்த அணுகுமுறையை உள்ளடக்கியுள்ளது. செயற்பாட்டுக் கற்றலின்பால் (Active Learning) மாணவரை ஆசிரியர் வழிப்படுத்துதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளிலும் செயற்பாடுகளின் இறுதியிலும் கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றை நடத்தலாம்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டை இலகுவாக நடத்தத்தக்கவாறாக பொது நியமங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது என விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து நியமங்களுள் முதல் மூன்று நியமங்களும் குறித்த தேர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்காக ஒருங்கு சேர்ந்துள்ள அறிவு, திறன் மனப்பாங்குகளை முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். மீதி இரண்டு நியமங்களையும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளத்துணையாகும் வகையில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் செயற்படும் போது இந்நியமங்கள் தொடர்பான நடத்தை மாற்றங்களை இனங்காண ஆசிரியர் முயற்சி செய்தல் வேண்டும். கூடவே கணிப்பீட்டின் ஊடாக அந்நடத்தைகளை மேலும் வலுப்படுத்துவதிலும், மதிப்பீட்டின் ஊடாக அவற்றை அளந்தறிவதிலும் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். இவற்றோடு, வகுப்பறையில் எழுத்துச் சோதனைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றிலும் மாத இறுதியிலும், தவணை இறுதியிலும், ஆண்டிறுதியிலும் நடத்தப்படும் பாடசாலை மட்ட, வலய மட்டப் பரீட்சைகளிலும் மாணவரை ஈடுபடுத்தலாம்.

Draft

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

Draft

## அலகு 9.1 இலங்கையின் கரையோரப் பிரதேசம் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் வருதல்

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர், அந்த நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியை நிறுவினர். இவ்வாறு கரையோரப் பிரதேசங்களைத் தமது நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்த அவர்கள் கண்டி இராசதானியையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வரும் நோக்கில் இடையிடையே அதனை ஆக்கிரமித்ததால் கண்டி இராசதானியின் அரசர்கள் போர்த்துக்கேயரை இலங்கையிலிருநச்து வெளியேற்ற ஒல்லாந்தரின் துணையை நாடினர். ஒல்லாந்தரும் போர்த்துக்கேயரைப் போன்று வர்ததகத்தில் ஆர்வம் காடடியவர்களாவர். போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டாகும் போது ஒல்லாந்தரும் வர்த்தகப் பொருட்களைப் பெறும் பொருட்டு ஆசியாவுக்கு வந்தனர். ஒல்லாந்தர் தமது வர்த்தக நடவடிக்கைகளை உறுதியாகவும் முறையாகவும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு VDC சங்கம் (ஒல்லாந்து கிழக்கிந்திய வர்த்தக சங்கம்) என்ற பெயரில் ஒரு அமைப்பினை நிறுவினர். ஆசியாவில் ஒல்லாந்தரின் அரசியல் ஆதிக்கத்தைப் பரவலடையச் செயதல், வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல் என்பன இந்த வர்த்தக சங்கத்தால் மேற்கொள்ப்பட்டன. ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வரும் வரையில் ஒரு நூற்றாண்டு காலமாகப் போர்த்துக்கேயரின் வர்த்தக ஆதிக்கத்திற்கு வேறு ஐரோப்பிய இனத்தவர்களால் அச்சுறுத்தல் இருக்கவில்லை. எனினும் ஒல்லாந்தர் வந்ததும் ஆசியாவில் வர்த்தக நடவடிக்கை தொடர்பாக இரு சாராருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. கண்டி இராசதானியுடனான ஒல்லாந்தரது தொடர்பு, ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக, பொரளாதார, பண்பாட்டுத் தொடர்பு என்பன பற்றிக் கற்பது இந்த அலகில் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி 1.0** : இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் செயற்பாடு களை விசாரணை செய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர் கைப்பற்றிய விதத்தினை விபரிப்பார்.
- ஒல்லாந்தரின் கீழ் இருந்த பிரதேசங்களை இலங்கைப் புற வரிப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.
- மலைநாட்டு அரசுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கான காரணங்களை இனங்காண்பார்.

Draft

- நெகிழ்ச்சித்தன்மையின் மூலம் முரண்பாடுகளைக் குறைத்துக் கொள்ளத்தக்க விதத்தைப் பயில்வார்.
- கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் ஆட்சியை விபரிப்பார்.
- ஒல்லாந்தரின்கீழ் இலங்கையின் பொருளாதார, சமூக, பண்பாட்டுச் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.
- ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இலங்கைக்குக் கிடைத்த புதிய அம்சங்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**1. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் வருதல்**

**1.1. கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் ஆட்சி நிறுவப்பட்டன.**

- ஒல்லாந்தர் கீழைத் தேசங்களுக்கு வருதல் (1595 ஆம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வருகை தருதல், VOC சங்கத்தை நிறுவுதல், ஆசியாவில் ஒல்ாந்தரது அதிகாரத்தைக் கட்டியெழுப்புதல்
- கண்டி இராசதானியின் மன்னர்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடுதல்
(1 ஆம் விமலதர்மசூரியனின் காலத்தில் ஒல்லாந்தத் தூதுவர்கள் கண்டி இராசதானிக்கு வருதல், செனரத் மன்னன் ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல்)
- 1638 ஆம் ஆண்டு இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான உடன்படிக்கை ஏற்படுத்தப்படல் (இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு, 1638 ஆம் ஆண்டு உடனபடிக்கை, உடன்படிக்கையில் அடங்கிய முக்கியமான விடயங்கள்)
- போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள்
(திருகோணமலை, நீர்கொழும்பு, காலி, களுத்துறை, கொழும்பு ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றுதல், போர்த்துக்கேயர் தோல்வி அடைதல்)
- கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்படல்
(கைப்பற்றிய கோட்டைகளை ஒல்லாந்தர் தம் வசம் வைத்துக் கொள்ளல், மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்படல், ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசங்களில் ஆட்சியை நிறுவுதல்)

**ஒல்லாந்தருக்கும் கண்டி இராசதானிக்கும் இடையிலான தொடர்புகள்**

- இரண்டாம் இராஜ சிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு (மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே முரண்பாடு ஏற்படல், மன்னன் கண்டி இராசதானியின் அதிகாரத்தைப் பரவலாக்கல்)
- கண்டி இராசதானியுடனான தூதுத் தொடர்புகள் (தூதுப் பயணங்கள், கடிதப் போக்குவரத்து, பரிசில்கள் பரிமாற்றம்)
- சமாதானக் கொள்கையும் மோதல்களைத் தவிர்த்தலும் (இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னனின் சமாதானக் கொள்கை, கண்டி இராசதானி மன்னரின் சமயப் பண்பாட்டு செயற்பாடுகளுக்கு ஒல்லாந்தர் ஒத்துழைப்பு அளித்தல்)

Draft

- ஒல்லாந்தர் கண்டி இராசதானியை ஆக்கிரமித்தல் (18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான கருத்து வேறுபாடு, கீர்த்தி ஸ்ரீ இராஜ சிங்கனது காலத்தில் ஒல்லாந்தர் கண்டி இராசதானி மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்ளல்)

**1.1 கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது நடவடிக்கைகளைத் தேடியறிவார்.**

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் ஆட்சியை விபரிப்பார்.
- ஒல்லாந்தரின்கீழ் இலங்கையின் பொருளாதார, சமூக, பண்பாட்டுச் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.
- ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இலங்கைக்குக் கிடைத்த புதிய அம்சங்களை எடுத்துக்காட்டுவார்.


**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**1.2 ஒல்லாந்தரது நிருவாக, பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள்**

- ஒல்லாந்தரது நிருவாக அமைப்பு
  - VOC சங்க பணிப்பாளர் குழு, பத்தேவியா/ பட்டேவியா கீழ்நாட்டு ஒல்லாந்த தலைமையகம்
  - இலங்கையின் ஒல்லாந்த ஆளுநர்
  - ஒல்லாந்த நிருவாகக் கட்டமைப்பு, கொமாண்டரிகளாப் பிரித்தல், பிரதேச நிருவாகமும் அதிகாரிகளுக்கும், நீதிமன்றக் கொள்கை
- ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள்
  - கிழக்கிந்திய வர்த்தக சங்கம் உச்ச இலாபத்தைப் பெறும் நோக்கம்
  - விவசாய நடவடிக்கைகள்
  - தோம்புப் பதிவேடுகள் நடைமுறைப்படுத்தல்
- சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள்
  - சமயக் கொள்கைகள்
  - கல்விச் செயற்பாடுகள்
  - ஒல்லாந்தரது பண்பாட்டு அம்சங்கள் இந்நாட்டில் பரவியமை

Draft



விளக்கம்
ஒல்லாந்தரின் ஆட்சிப் பிரதேசம்
கொமாண்டரி எல்லை
யாழ்ப்பாணம்
யாழ்ப்பாண கொமாண்டரி
வன்னி
மன்னார்
திருகோணமலை
கற்பிட்டி
புத்தளம்
மட்டக்களப்பு
சிலாபம்
கண்டி இராச்சியம்
நீர்கொழும்பு
கொழும்பு கொமாண்டரி
கொழும்பு
பாணம
களுத்துறை
யால
காலி கொமாண்டரி
அம்பாந்தோட்டை
காலி
மாத்தறை
கி.மீ

# Draft

**செயற்பாடு 1:**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு வினா - விடைப் போட்டியை நடாத்தவும்.

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமாகக் குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1 இல் உள்ள தலைப்புக்களைக் குழுக்களிடையே பகிர்ந்தளிக்கவும்.
- ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைத்த தலைப்புக்கு அமைய வினா - விடைகளைத் தயாரிக்கும்படி அறிவுரை வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவும் தயாரித்த வினா - விடைகளை சேகரித்துக் கோவைப்படுத்தவும்
- பொருத்தமான புள்ளி வழங்கும் முறையைப் பின்பற்றி வினா - விடைப் போட்டியை நடாத்தவும்.

வினா - விடைப் போட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள்

**இணைப்பு - 1**

- கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் கீழ் வருதல்
- ஒல்லாந்தரும் கண்டி இராசதானியும்
- ஒல்லாந்தரின் நிருவாக, பொருளாதார, சமூக பண்பாட்டு நடவடிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கணிப்பீடு, மதிப்பீடுகளைச் செய்யவும்.

- இலங்கையில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்படுதல் தொடர்பான விடயங்களை முன்வைப்பார்.
- தலைப்புக்கேற்ற வினா - விடைகளைத் தயாரிப்பார்.
- வினாக்களின் தன்மையையும் பிழையின்மையையும் உறுதி செய்வார்.
- குழு உணவர்வுடன் செயற்படுவார்.
- வினா - விடைப் போட்டியை நடாத்துவார்.

**செயற்பாடு 02**

ஒல்லாந்தரது ஆட்சியால் இலங்கையரது வாழ்வுடன் புதிதாக இணைந்த புதிய அம்சங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பின்வரும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

- இதனைக் குழுச் செயற்பாடாகச் செய்யவும்.
- வகுப்பைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒல்லாந்தரது ஆட்சியின் கீழ் இந்நாட்டின் பண்பாட்டுடன் புதிதாக இணைந்த அம்சங்கள் தொடரபாக மாணவர்களுடன் கலந்துரையாடுக. (சொற்கள், ஆடை, ஆபரணங்கள், உணவு, பானம், பொருட்கள்)
- செயற்பாட்டிற்குத் தேவையான படங்கள் மற்றும் தகவல்களை சேகரிக்கும் பொருட்டு ஒரு வாரத்திற்கு முன்னர் மாணவருக்கு அறிவிக்கவும்.
- செயற்பாடு நடாத்தப்படும் திகதியை அறிவிக்கவும்
- செயற்பாடு மேற்கொள்ளப்படும் தினம், மாணவர்கள் சேகரித்த படங்கள், தகவல்களை வகைப்படுத்தவும்.
- குழுக்களுக்கு அவைகளை வழங்கி செயற்பாட்டை மேற்கொள்ளவும்

Draft

- படங்கள் என்பனவற்றை ஒட்டி, அது தொடர்பாகத் தேடிய தகவல்களை டிமைன் கடதாசியில் ஒட்டி செயற்பாடை மேற்கொள்ள மாணவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.
- செயற்பாடு முடிவடைந்த பின்னர் குழுக்களுக்கு அவற்றை முன் வைக்க சந்தர்ப்பம் வழங்குவதோடு, நிறை குறைகளை எடுத்துக் கூறவும்.
- வகுப்பறையில் செயற்பாட்டைக் காட்சிப்படுத்தவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- ஒல்லாந்தரது ஆட்சிக்காலம் தொடர்பான தகவல்கள் அடங்கிய வேறு மூலாதாரங்கள்
- படங்கள்
- பத்திரிகைகளிலுள்ள படங்கள், கடிதங்கள், ஏ4
- பிளட்டிக்னம்
- பசை

**இணைப்பு 1**

ஒல்லாந்தரால் இந்நாட்டில் இணைந்த புதிய அம்சங்கள் தொடர்பாக உமது குழு சேகரித்த தகவல்கள், படங்கள் என்பனவற்றை செயற்பாட்டுடன் காட்சிப்படுத்தும் பொருட்டுப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளவும்.

குழு **I**

- ஒல்லாந்த (டச்சு) மொழியிலிருந்து இணைந்த சொற்கள்

குழு **II**

- ஆடை, அணிகள்

குழு **III**

- உணவு வகை

குழு **IV**

- வீட்டுப் பாவனைப் பொருட்கள்

Draft

## அலகு 9.2 இலங்கையில் பிரித்தானியரது ஆட்சி

1796 ஆம் ஆண்டு ஒல்லாந்தரைத் தோற்கடித்து ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியதுடன், 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியையும் கைப்பற்றினர். இது முதற் கொண்டு 1948 ஆம் ஆண்டு வரை இலங்கை பிரித்தானியரது குடியேற்ற நாடாக விளங்கியது. பிரித்தானியரது ஆட்சிக் காலம் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த காலம், இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த காலம் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் ஐரோப்பியரது ஆதிக்கம் நிலவிய காலங்களை நோக்குகையில், பிரித்தானியர் இந்நாட்டிற்கு வருதல், இலங்கை வரலாற்றில் பாரிய மாற்றங்களைக் கொண்ட காலமாக விளங்கியதை அவதானிக்கலாம். பிரித்தானியர் இந்நாட்டிற்கு வருதல், இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல், கண்டி இராசதானியைத் தம்பலிப்படுத்துதல், 1818, 1848 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகங்கள், பிரித்தானியரது காலத்தில் இந்நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன பற்றி இந்த அலகில் கவனம் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி 2.0** : இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : பிரித்தானியரது ஆதிக்கம் இலங்கையில் நிலை நாட்டப்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியரது ஆதிக்கம் இலங்கையில் நிறுவப்படுவதற் கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.
- உள்நாட்டவரின் எதிர்ப்புக்களையும் அவற்றின் தன்மையையும் விளக்குவார்.
- தமது இறைமையைப் பாதுகாக்கும் பொருட்டுப் போராட் டங்களை முன்னெடுத்த தலைவர்களின் செயற்பாட்டை உயர்வாக மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2.1 இலங்கைக்குப் பிரித்தானியர் வருகை தருதலும் ஆட்சியை நிலை நாட்டிக் கொள்ளுதலும்**

- இலங்கை மீது பிரித்தானியர் கவனம் செலுத்துவதற்கான காரணங்கள்
- 1796 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிரித்தானியருக்கும் கண்டி இராசதானிக்கும் இடையிலான தொடர்பு

Draft

- கிழக்கிந்திய ஆங்கில வர்த்தக சங்கம் இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் தமது அதிகாரததை நிலை நாட்டுதல்
- 1796 ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களின் கிளர்ச்சி

**கண்டி இராசதானியைக் கைப்பற்றுதல்**

- 1803 ஆம் ஆண்டு கண்டி இராசதானி ஆக்கிரமிப்பு
- ஆளுநர் தோமஸ் மெயிட்லன்ட், ஜோன் டொயிலி
- கண்டி இராசதானியின் உள்நாட்டுப் பூசல்கள்
- 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானி ஆக்கிரமிக்கப்பட்டமையும் மன்னன் சிறை பிடிக்கப்பட்டமையும்

**1818 சுதந்திரப் போராட்டம்**

- போராட்டத்திற்கான காரணங்கள்
- ஆங்கில எதிர்ப்புப் போராட்டமும் தலைவர்களும்
- போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

**1848 சுதந்திரப் போராட்டம்**

- போராட்டத்திற்கான காரணங்கள்
- போராட்ட தலைவர்கள்
- போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

**செயற்பாடு 01**

- இதனைத் தனிச் செயற்பாடாகச் செய்யவும்.
- இணைப்பு 01 இல் உள்ள வினாக்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும்

| வரலாற்று நிகழ்வுகள் | அதனுடன் தொடர்புடைய நபர்கள் |
|---|---|
| 1. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை சந்திக்க வந்த முதலாவது தூதுவன் யார்? | ........................................ |
| 2. பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றும்போது கண்டி இராசதானியை ஆட்சி செய்த நாயக்க மன்னன் யார்? | ........................................ |
| 3. 1798 ஆம் ஆண்டு இலங்கையில் நியமிக்கப்பட்ட முதலாவது பிரித்தானிய ஆளுநர் யார்? | ........................................ |
| 4. மெயிற்லன்ட் ஆளுநருடன் கண்டி இராசதானி தொடர்பான விபரங்களை சேகரித்த பிரித்தானிய அதிகாரி யார்? | ........................................ |
| 5. 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியைக் கைப் பற்றிய பிரித்தானிய ஆளுநர் யார்? | ........................................ |

Draft

| | |
|---|---|
| 6. இலங்கை முழுவதும் பிரித்தானியரது ஆட்சிக்கு உடபடும்போது கண்டி இராசதானியை ஆட்சி செய்த மன்னன் யார்? | ......................................... |
| 7. 1818 ஆம் ஆண்டு கண்டி இராசதானியைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர் யார்? | ......................................... |
| 8. 1833 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தை முன்வைத்தவர் யார்? | ......................................... |
| 9. 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின்போது இருந்த ஆளுநர் யார்? | ......................................... |
| 10. இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் யார்? | ......................................... |

அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்பும்படி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.

(ஜோன் பைபஸ், டொரிங்டன் பிரபு, ரொபட் பிரவுண்ரிக், ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், பிரடரிக் நோர்த், கோல்புறுக், கெப்பட்டிபொல, ஜோன் டொயிலி, இராஜாதி ராஜ சிங்கன், புரன் அப்பு)

Draft

**தேர்ச்சி மட்டம் 2.2** : பிரித்தானியரது ஆட்சியின் கீழ்ப் பொருளா ார நடவடிக்கை ளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- வர்த்தகப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.
- பிரித்தானியரின் கீழ் உள்நாட்டு விவசாயக் கைத்தொழிலை விபரிப்பார்.
- பிரித்தானியரின்கீழ் இந் நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2.2 பிரித்தானியரின் கீழ் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி**

**பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை**

- பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கும் முன்னர் நிலவிய பொருளாதார நிலைமை
- பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் கவனம் செலுத்துதல் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல்
  - அரசாங்க நிலங்களை விற்பனை செய்யும் கொள்கை
  - உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் பயிர்ச் செய்கையாளர் நிலங்களைப் பணம் செலுத்தி வாங்கக் கூடியதாக இருந்தமை
  - தனிப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்ற விதத்தில் சட்டங்களை இயற்றியமை

**பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் முன்னேற்றம்**

- கோப்பி
- சிங்கோனா, கொக்கோ
- தேயிலை
- தென்னை
- இறப்பர்

**உள்நாட்டு விவசாயத்தை விருத்தி செய்தல்**

- பிரித்தானியரது காலத்தில் உள்நாட்டு விவசாயம் நலிவடைதல்
- பிரித்தானியர் உள்நாட்டு விவசாயத்தை விருத்தி செய்ய முயன்றமை
  - குளங்கள், கால்வாய்களைப் புனருத்தாரணம் செய்தல்
  - நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவுதல்
  - கூட்டுறவு இயக்கத்தை நிறுவுதல்

Draft

**பிரித்தானியரின் கீழ் பொருளாதாரம் என்ற தலைப்பில் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.**

**செயற்பாடு 02**

- வகுப்பறையில் மாணவர்களைப் பொருத்தமாகக் குழுவாகப் பிரிக்கவும்.
- பிரித்தானியரின் கீழ் பொருளாதாரம் என்ற பாடத்தை மாணவர்களுடன் கலந்துரையாடி, இறுதியில் இணைப்பு 01 இல் உள்ள அட்டவணையைக் கரும்பலகையில் எழுதவும்.
- அதில் A பகுதியில் உள்ளவை தொடர்பான மாணவரின் கருத்துக்களை B பகுதியில் குறிப்பிடுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும். (குழுவாகக் கருத்துக்களை முன்வைத்தல் போதுமான பொழுதிலும், எவரேனும் தனிப்பட்ட கருத்தக்களை முன்வைத்தால் அதற்கு இடமளித்தல் வேண்டும்.)
- குழுவாகக் கருத்து வெளியிடுவதில் கவனம் செலுத்திப் பாடத்தை மீளாய்வு செய்க.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 01

| A | B |
|---|---|
| 1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகம் | ..................................................<br>..................................................<br>..................................................<br>..................................................<br>.................................................. |
| 2. உள்நாட்டு விவசாயம் நலிவுறல் | ..................................................<br>..................................................<br>..................................................<br>..................................................<br>.................................................. |

**கணிப்பீடு, மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

கீழ்க் காணப்படும் நியமங்களின் அடிப்படையில் கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளவும்.

- பிரித்தானியரின் கீழ் இலங்கையின் பொருளாதார நிலையைத் தெளிவுபடுத்துவார்.
- பிரித்தானியரின்கீழ் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட நன்மைகளையும் தீமைகளையும் எடுத்துக் காட்டுவார்.
- வாக்கியத்திற்கேற்ப தகவல்களை முன்வைப்பார்.
- குழுவாக செயற்படுவார்.
- தலைமை தாங்கி செயற்படுவார்.

Draft

## அலகு 9.3 இலங்கையில் சமய, தேசிய மறுமலர்ச்சி

ஐரோப்பியர் இலங்கைக்கு வந்ததன் நோக்கங்களில் சமயத்தைப் பரப்புதலும் ஒன்றாகும். இதற்கமைய ஆசியாவில் தமது அதிகாரத்தைப் பரப்பி இருந்த போர்த்துக்கேயர் தமது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பி இருந்ததோடு, ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்பினர். பிரித்தானியர் இலங்கைக்கு வந்தபோது ஐரோப்பாவில் பல்வேறு மறைபரப்புக் குழுக்கள் (மிஷனரி) தோன்றி ஐரோப்பாவுக்கு வெளியே தமது சமயங்களைப் பரப்பும் ஆவலில் இருந்தன. அதன்படி பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் பல்வேறு மறைபரப்புக் குழுக்கள் (மிஷனரி) இலங்கைக்கு வந்து தமது சமயங்களைப் பரப்புவதில் ஈடுபட்டன. இந்த நடவடிக்கை காரணமாக இந்நாட்டின் பௌத்த, இந்து, இஸ்லாமிய மதங்களைப் பின்பற்றியோரிடையேயும் சமய மறுமலர்சசி ஏற்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டிற்கு வருகை தந்த மறைபரப்புக் குழுக்கள் (மிஷனரி) அவைகளின் சமயம் பரப்பும் முறை, பௌத்த, இந்து, இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி இயக்கங்கள், சமய மறுமலர்ச்சியுடன் தேசிய பண்பாட்டைப் பாதுகாத்தல் தொடர்பாக ஏற்பட்ட ஆர்வம் என்பன பற்றி இந்த அலகில் கவனம் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி 3.0** : இலங்கையின் மரபுரிமை யைப் பாதுகாக்கும் பொரு ட்டு நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : வெளிநாட்டுச் சக்தி களின் முன்னிலையில் தேசியப் பண்பாட்டைக் காத்துக் கொள்வதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள்** : 08

**கற்றற்பேறுகள்** :

- சமய, பண்பாட்டு எழுச்சியைத் தெளிவுபடுத்துவார்.
- வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத் தலைவர்களின் செயற்பாடு களை எடுத்துக் காட்டுவார்.
- சுதேசப் பண்பாட்டைக்காக்கும் பொருட்டு தோள் கொடுத்த தலைவர்களை உயர்வாக மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**மறைபரப்புக் குழுக்களும் (மிஷனரி) அவைகளின் செயற்பாடுகளும்**

- 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்த மிஷனரி குழுக்கள்
- அவைகளின் சமய போதனை நடவடிக்கை

**பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்**

- தலைமை தாங்கியோரும் நிறுவனங்களும்
- அச்சகங்கள் நிறுவப்பட்டமையும், அச்சிடல் நடவடிக்கையும்

Draft

- விவாதங்கள்
- பௌத்த பாடசாலைகள் நிறுவனப்பட்டமை
- சுதேச பண்பாட்டைப் பாதுகாக்கும் மனநிலை

**இந்து சமய மறுமலர்ச்சி இயக்கம்**

- ஆறுமுக நாவலர் அவர்களும் இந்து சமய மறுமலர்ச்சியும்
- எழுத்துத்துறை
- இந்து சமயப் பாடசாலைகளை நிறுவியமை

**இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்**

- ஒராபி பாஷா, எம்.சீ. சித்தி லெப்பை அவர்கள்
- இஸ்லாமியக் கல்வி மறுமலர்ச்சி

**செயற்பாடு 1**

மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்கும் விதத்தில் கீழ்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.

- இது வினோதமான விளையாட்டாகத் திறந்தவெளியில் செய்யக்கூடிய செயற்பாடாகும்.
- செயற்பாட்டை செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தேசிய, சமய மறுமலர்ச்சித் தலைவர்கள் தொடர்பாகப் பேச்சு ஒன்றை முன்வைப்பதற்கான ஆயத்தத்தை மேற்கொள்ளும்படி அறிவுரை வழங்கவும். அதற்கான நேரம் 3 நிமிடங்களாகும்.
- பாடநூல், ஏனைய நூல்களிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
- குறிப்பிட்ட தினத்தில் தமக்குக் கிடைக்கும் நபரைப் பற்றிய விடயங்களை முன்வைக்க வேண்டும் எனக் கூறுதல் வேண்டும்.
- இணைப்பு 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் அடங்கிய சீட்டுகளைத் தயார் செய்தல்
- குறிப்பிடட தினத்தில் மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று வடடமாக நிற்கும்படிக் கூறுதல்
- தொப்பியை ஒருவருக்கு அணிவிக்கும் விளையாட்டை ஆரம்பித்தல். இவ்வேளையில் பின்னணியாக இசைத்தட்டில் இசை அல்லது பாடல்கள் இசைக்கப்படும்/ பாடப்படும்.
- பாடல்/ இசை நிறுத்தப்படும்போது எவர் கையிலோ அல்லது தலையிலோ தொப்பி இருக்கின்றதோ அவர் நடுவில் வந்து சீட்டில் தனக்குக் கிடைக்கும் நபரைப் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் எழுதப்பட்டுள்ள சீட்டுகள்
- தொப்பி
- பாடல்/ இசை அடங்கிய ஒலி நாடா, கெசட்

# Draft

**இணைப்பு 1**

- ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள்
- அநகாரிக தர்மபால அவரக்ள்
- ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
- மீகெட்டுவத்த குணாநந்த தேரர்
- ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்
- எம்.சி. சித்தி லெப்பை அவர்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்தவும்.

- சமய மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- தகவல்களை சரியாக முன்வைப்பார்.
- தேசியத் தலைவர்களின் சேவையை உயர்வாக மதிப்பார்.
- தகவல்களை ஒழுங்கு செய்து முன்வைக்கும் திறமையை வெளிப்படுத்துவார்.
- உரிய கால வேளையில் முன்வைத்து முடிப்பார்.

Draft

# அலகு 9.4 இந்திய சுதந்திரப் போராட்டம்

1498 ஆம் ஆண்டு வாஸ்கொட காமா இந்தியாவுக்கு வருகை தந்ததுடன் ஐரோப்பியரின் ஆதிக்ம் இந்தியாவில் பரவத் தொடங்கியது. அது முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகிய ஐரோப்பிய இனத்தவரின் ஆதிக்கத்தை அங்கு காணக்கூடியதாக இரந்தது. இந்தியா பிரித்தானியரது ஆதிக்கத்தின்கீழ் வருவதற்கு முன்னர் மொகலாயப் பேரரசு நிலவியதால் அங்கு ஐரோப்பியரின் நடவடிக்கைகள் ஓரளவு கட்டுப்பட்டதாக இருந்தது. எனினும் 19 ஆம் நூந்றாண்டின் நடுப்பகுதியில் இந்தயிாவின் பெரும் பகுதியல் தமது ஆதிக்கத்தை செலுத்துவதில் ஆங்கிலேயர் வெற்றி கண்டனர்.

இந்தியா பிரித்தானியரின் குடியேற்ற நாடாகிய பின்னர் 19 அம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய சுதநத்திரப் போராட்டம் ஆரம்பமாகியது. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அது மிகவும் துரிதமாக செயற்பட்டது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல்வேறு மொழிகளைப் பேசிய இந்திய மக்கள் மகாத்மா காத்தி உள்ளிட்ட இந்தியத் தலைவர்களின்கீழ் தேசப்பற்றுடன் சுதந்திரப் போராட்டத்தை மேற்கொண்டமை ஏனைய ஆசியக் குடியேற்ற நாடுகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. இந்தியாவில் ஐரோப்பியரது ஆதிக்கம், இந்தியா பரித்தானியரது குடியேற்ற நாடாகியமை, சுதந்திரப் போராட்ட இயக்கம், இந்திய சுதந்தரப் பேராட்டத்தில் முன்னின்று உழைத்த தலைவர்கள் ஆகிய விடயங்கள் மீது இந்த அலகில் கவனம் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி 4.0** : இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அந்நாட்டு மக்கள் ஐக்கியப்பட்டு செயற்பட்ட விதத்தினை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையர் என்ற எண்ணத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அந்நாட்டு மக்கள் ஐக்கியப் பட்டு செயற்பட்ட விதத்தினைக் கற்றறிவார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- பேரரசுவாதிகள் இந்தியாவில் அதிகாரத்தைப் பரப்பிய விதத்தை விளக்குவார்.
- இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தை விபரிப்பார்.
- இந்திய தேசிய சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் வெவ் வேறு இனத்தவர்கள் ஐக்கியப்பட்டுச் செயற்பட்ட விதத்தை மதிப்பார்.

Draft

- இந்திய தேசிய சுதந்திரப் போராட்ட இயக்கத்துடன் தொடர்புடைய நாட்டுப்பற்று மிக்கோரை முன்மாதிரியாகக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**இந்தியாவில் ஐரோப்பிய ஆதிக்கம்**
- போர்த்துக்கேயர் , ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகிய இனத்தவர் இந்தியாவுக்கு வருதல்
- இந்தியா பிரித்தானியரின் குடியேற்ற நாடாகுதல்

- இந்திய சுதந்திரப் போராட்டம்
  - 1857 சிப்பாய்க கலகம்
  - கலகத்திற்கான காரணங்கள்
  - கலகத்தின் தன்மை
  - விளைவுகள்
- இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படல்
  - தேசிய காங்கிரஸ் தோற்றம் பெற்ற பின்னணி
  - தேசிய காங்கிரஸின் நோக்கம்
  - தேசிய காங்கிரஸின் செயற்பாடுகள்
  - முஸ்லிம் லீக் நிறுவப்படல்
- இந்திய சுதந்திரப் போராட்டத்தில் துல்லியமாகத் தெரியும் இயல்புகள்
  - தேசிய காங்கிரஸின் ஆர்ப்பாட்டம்
  - வேறு அமைப்புக்களும் செயற்பாடும்
  - ஆங்கிலேயர் பின்பற்றிய உபாயங்கள்
  - மகாத்மா காந்தியின் செயற்பாடுகள்
  - இந்தியா சுதந்திரம் பெறுதல்
- இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய தலைவர்கள்
  - தடாபாய் நவரோஜ்
  - சுரேந்திரநாத் பானர்ஜி
  - பால கங்காதர திலகர்
  - மகாத்மா காந்தி
  - மௌலானா அப்துல் கலாம் ஆசாத்
  - ஜவஹர்லால் நேரு
  - ஏனைய தலைவர்கள் (பெண் தலைமைத்துவம்)

Draft

**மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்கும் வகையில் கீழ்க்காணும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.**

**செயற்பாடு 01**

- இதனைக் குழுச் செயற்பாடாகச் செய்யவும்.
- மாணவர்களைப் பொருத்தமாகக் குழுவாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1 இனைக் குழுக்களுக்கு வழங்கித் தகவல்கள் சேகரிப்பதற்குக் காலத்தை வழங்கவும்.
- செயற்பாட்டை செய்வதற்குப் பொருத்தமான திகதியை முடிவு செய்து மாணவர்களுக்கு அறிவியுங்கள்
- உரிய திகதியல் இணைப்பு 2, 3 இனை மாணவர்களுக்கு வழங்கவும்
- சேகரித்த விபரங்கள், படங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைக்கு ஏற்ப செயற்பாட்டினை செய்யவும்.
- மாணவரின் செயற்பாடடை சேகரித்து சுவர்ப்பத்திரிகை தயாரிக்கவும்.

**தர விருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் படம்
  டிமைன் தாள்
  பிளட்டினம்
  பசை
  பாடநூல், வரலாறு தொடர்பான நூல், ஏனைய நூல்கள்


**இணைப்பு 1**

- மகாத்மா காந்தி
- தடாபாய் நவரோஜி
- சுரேந்திரநாத் பானர்ஜி
- மௌலானா அப்துல் கலாம் ஆசாத்
- ஜவஹர்லால் நேரு


Draft


**இணைப்பு 2**









Draft

**இணைப்பு 3**

**குழுவுக்கான அறிவுரை**

- உம்மிடமுள்ள படங்களில் தகவல் சேகரிக்கும் பொருட்டு உமது குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள நபரின் படத்தைத் தெரிவு செய்யவும்.
    - அதனை உமக்கு வழங்கப்படும் டிமைன் தாளில் ஒட்டவும்
    - அதன் கீழ் அந்நபரின் பெயரை சரியாக எழுதவும்
    - அதன் கீழ் நீர் சேகரித்த தகவலை எழுதவும்

  அதில் அந்நபர் பிறந்த இடம், அவரது வாழ்வு, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்களிப்பு, அந்நபரின் வாழ்க்கையில் இருந்து நீர் கற்றுக் கொள்ளக் கூடியவைகள் என்பனவற்றை எழுதுக.
- நீர் எழுதியவற்றை வகுப்பில் சுவர்ப்பத்திரிகையில் காட்சிப்படுத்தவும்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டினை நடாத்தவும்.

- தகவல்களில் பிழையின்மை
- பல்வேறு வழிகளில் தகவல்களை சேகரித்தல்
- தகவல்களை முறையாகக் கோவைப்படுத்துதல்
- நேர முகாமைத்துவம்
- முடிவு (முழுமை)

Draft

**மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்கும் வகையில் கீழ்காணும் செயற்பாட்டைச் செய்யவும்.**

இணைப்பு 01 இல் உள்ளடக்கப்பட்டுள்ள செயலட்டையைப் பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**செயற்பாடு 02**

- இது தனிச் செயற்பாடாகும்.

- இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நிகழ்வுகள் சிலவும் முன்னுதாரணங்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன. அவை தொடர்பாக உமது கருத்துக்களை எதிரேயுள்ள கோடுகளில் எழுதவும்.

1. தேசப்பற்றின் ஆரம்ப சந்தர்ப்பம்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................
2. ஒற்றுமையின் தேவை ஏற்படல்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................
3. முஸ்லிம் லீக் நிறுவப்படல்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................
4. மனந்தளராது இலக்கை நோக்கி செல்லுதல்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................
5. ஒன்றிணைந்து செயற்பட்டு சுதந் திரத்தைப் பெற்றுக் கொள்ளல்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................
6. நற்பண்புகளுடன் கூடிய அரசியல்
    - ........................................................
    - ........................................................
    - ........................................................

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டினை நடாத்தவும்.

- எளிமையான முறையிலும் சரியான முறையிலும் தகவல்களை முன்வைத்தல்
- கருத்துக்களை விமர்சன ரீதியில் முன்வைத்தல்
- நடுநிலையில் தகவல்களை எழுதுதல்
- மனப்பாங்கு வளர்ச்சிக்கான தகவல்களை எழுதுதல்
- உரியவேளையில் செயற்பாட்டை நிறைவு செய்தல்

Draft

## அலகு 9.5 இலங்கையின் அரசியலமைப்பு சீர்த்திருத்தமும் தேசிய சுதந்திர இயக்கமும்

1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானி பிரித்தானியரின் கீழ் வந்ததும் அதுவரை இலங்கையில் நிலவிய முடியாட்சி முறை முடிவடைந்தது. அதன் பின்னர் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரை நாடு முழுவதும் பிரித்தானியரது நிருவாகத்தின் கீழ் இருந்தது. 1833 ஆம் ஆண்டு பிரித்தானியரால் கோல்புறூக் சீர்திருத்தம் இடம் பெற்றது. எனினும் நிருவாகத்தில் சுதேசிகளுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்குமாறு இலங்கையர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் விளைவாக இடையிடையே இந்நாட்டின் அரசியலமைப்பு சீர்த்திருத்தங்கள் சில அறிமுகம் செயய்ப்பட்டன. எனினும் இதனால் திருப்தியடையாத இலங்கையர் தொடரந்து ஆர்ப்பாட்டங்களில ஈடுபட்டனர். இதன் விளைவாக 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. பிரித்தானியரால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் சீர்த்திருத்தங்கள், இலங்கையரது ஆர்ப்பாட்ட இயக்கங்கள் (தேசிய சுதந்திரப் போராட்டம்) பற்றிய தகவல்கள் என்பன இந்த அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 5.0** : இலங்கையின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சியையும், அதன் பொருட்டுத் தேசியத் தலைவர்களின் பங்களிப்பையும் நுணுகியாய்ந்து நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சியை விசாரணை செய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியரின் கீழ் செய்யப்பட்ட அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களைத் தெளிவுபடுத்துவார்.
- அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக இலங்கையரின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுவார்.
- இலங்கையின் பாராளுமன்ற முறை படிப்படியாக வளர்ச்சி யடைந்தமையை எடுத்துக் காட்டுவார்.

Draft

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- **1833 கோல்புரூக் - கமரன் சீர்த்திருத்தம்**
  - கோல்புரூக் - கமரன் சீரத்திருத்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்
    - ஆண்டுதோரும் நாட்டின் வருமானம் குறைந்து செலவு அதிகரித்தமை
    - இந்நாட்டின் செலவை சரி செய்யும் பொருட்டு இடையிடையே பிரித்தானியர் பணம் கேட்டல்
  - கோல்புரூக் ஆணைக்குழுவின் ஆய்வுக்கு உட்பட்ட துறைகள்
    - இலங்கையின் நிர்வாகம் } W.M.C. கோல்புறூக்
    - வரவும் செலவும் }
    - அரச நிருவாக நிறுவனங்கள் }
    - நீதிமன்ற துறை - சார்ள்ஸ் H. கமறன்
  - செயற்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்கள்
    - சட்ட நிர்வாகக் கழகமும் சட்டவாக்கக் கழகமும் நிறுவப்படல்
    - கரை நாடும் மலை நாடும் இணைக்கப்படல்
    - நிருவாக நடவடிக்கையின் பொருட்டு நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படல்
    - கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்படல்
    - ஆங்கிலக் கல்வியை பரவலடையச் செய்தல்
  - இலங்கையரின் ஆர்ப்பாட்டம்
    - கோல்புறுக் சீர்த்திருத்தத்தின் சில அம்சங்களை மீளாய்வு செய்யும் படிக் கேட்டு இந்நாட்டிலிருந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் முதன் முதலாக ஆர்ப்பாட்டம் செய்தல்
    - 20 ஆம் நூற்றாண்டில் எழுச்சியடைந்து வந்த இலங்கையின் மத்திய வகுப்பினர் இலங்கைக்கு அரசியல் சீர்த்திருத்தம் தேவை எனக் கோரிக்கை விடுத்தல்

- **குறூ மக்கலம் சீர்திருத்தம்**
  - 1910 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் கீழ் சட்டவாக்கக் கழகம்
  - சட்டசபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவதில் முதன் முறையாகத் தேர்தல் முறை அறிமுகமாகுதல்
  - கல்வி கற்ற இலங்கையர் சார்பில் ஒரு பிரதிநிதி அச்சபையில் நியமனம் பெறுதல்
  - இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் இருந்தமை

- **இலங்கை தேசிய சங்கம்**

  இலங்கையில் இதுவரை நிலவிய அமைப்புக்களின் சேர்க்கையாக 1919 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய சங்கம் நிறுவப்படல்

  இலங்கை தேசிய சங்கம் நிறுவப்பட்டமைக்கான காரணங்கள்
  - 1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லீம் கலவரம்
  - மதுவிலக்கு இயக்கத்தின் மூலம் பெற்ற ஊக்கம்
  - அதுவரை இருந்த சிறு அமைப்புக்களின் மூலம் பிரித்தானியருக்கு எதிராகப் பாரிய நடவடிக்கைகள் எடுக்க முடியாதென்பதை உணர்ந்தமை

Draft

- **இலங்கைத் தேசிய சங்கத்தின் நோக்கங்கள்**
  - இலங்கையர் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுப் பலம் வாய்ந்த ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளல்
  - சட்டவாக்க அதிகாரங்களைப் பரவலடையச் செய்தல்
  - அதன் அதிகாரங்களைக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ளல்
  - சுதேசத் தலைவர்கள் நிருவாக நடவடிக்கைகளில் கூடுதலாக இடம்பெற சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளல்
  - சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய இனத்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்புக்கள் பல பொதுக்குறிக்கோள்களின் பொருட்டு ஒன்றாக இணைந்தமை இந்நாட்டின் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும்.

- **1920 ஆம் ஆண்டு மனிங் சீர்த்திருத்தம்**
  - சட்டவாக்கக் கழகத்தில் முதன் முதலாக உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் அதிகரித்தல்
  - மாகாண தேர்தல் தொகுதி முறையை அறிமுகம் செய்தல்
  - வாக்குரிமையை சிறியளவில் பரவலாக்கல்

- **1924 மனிங் டெவொன்ஷயர் சீர்த்திருத்தம்**
  - சட்டவாக்கக் கழகத்தின் கட்டமைப்பு
  - சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் வரையறுக்கப்பட்ட வாக்குகளால் நியமிக்கப்பட்டவர்களாக இருந்தமை
  - இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் இருந்தமை
  - 1920 ஆம் ஆண்டின் அரசியல் சீர்த்திருத்தத்தில் இருந்த வாக்குரிமையில் எதுவித மாற்றமும் ஏற்படாமை

- **1931 டொனமூர் சீர்த்திருத்தம்**
  - டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்படலும் இலங்கைக்கு வருகை தரலும்
  - டொனமூர் குழுவின் முன் இலங்கையரின் சாட்சிகள்

- **டொனமூர் குழுவின் சிபார்சுகள்**
  - அரசுக்கழகம் நிறுவப்படல்
  - சர்வசன வாக்குரிமை
  - நிர்வாகக் குழு முறை
  - தேசாதிபதியும் அரச அதிகாரிகளும்

- **1947 சோல்பரி அரசியல் சீர்திருத்தம்**
  - சோல்பரிக்குழு நியமனம் பெறுதல்
  - சோல்பரிக்குழு இலங்கைக்கு வருகை தரலும் அரசியல் சீர்திருத்தமும்

- **சோல்பரி அரசியல் யாப்பு**
  - தேசாதிபதி பதவி
  - இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

Draft

- பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவை
- அரச சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும்

**செயற்பாடு 01**

**மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்கும் வகையில் கீழ்க்காணும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.**

- இலங்கையின் அரசியல் சீர்த்திருத்தம், தேசிய சுதந்திர இயக்கம் எனும் பாடங்களின் அடிப்படையில் கீழேயுள்ள 01வது அட்டவணையை நிறைவு செய்ய அறிவுறுத்தவும்.
- இதனைக் குழுச் செயற்பாடாகச் செய்யவும்
- மாணவர்களைப் பொருத்தமாகக் குழுக்களாகப் பிரிக்கவும்
- மேற்கூறப்பட்ட பாடவிடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடவும்
- இணைப்பு 01 இல் உள்ள அட்டவணையைக் கரும்பலகையில் குறிப்பிடவும்
- டிமைன் தாளில் அல்லது பிரிஸ்ட்டல் அட்டையில் அதனைப் பிரதி பண்ணும்படிக் குழுக்களுக்கு அறிவுரை வழங்கவும்
- குழுவில் அனைவருடனும் கலந்துரையாடி அட்டவணையைப் பூரணப்படுத்தவும்
- குழுச் செயற்பாட்டை வகுப்பில் முன்வைக்கவும்
- மாணவர்களின் செயற்பாட்டின் நிறை, குறைகளை வெளிப்படுத்திக் கரும்பலகையில் உள்ள அட்டவணையை நிரப்புக.
- அதனை மாணவர்கள் பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளும்படிக் கூறவும்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பிரிஸ்ட்டல் அட்டை, டிமைன் தாள், பிளட்டிக்னம்

**இணைப்பு 01**

| ஆண்டு | அரசியல் சீர்த்திருத்தம் | சட்டத்துறையின் பெயர் | சட்டவாக்கக் கழகத்தற்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர் தொகை | முக்கிய சீர்த்திருத்தம் |
|---|---|---|---|---|
| | | | | |

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளவும்.

- அரசியல் சீர்த்திருத்தத்தைப் பெயரிடுவார்.
- அரசியல் சீர்த்திருத்தம் பற்றிய தகவல்களை சரியாக அட்டவணைப்படுத்துவார்.
- கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைக்கமைய செயற்படுவார்.
- உரிய வேளையில் செயற்படுவார்.
- குழு ஒத்துழைப்புடன் செயற்படுவார்.

Draft

**செயற்பாடு 02**

**மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடங்கும் வகையில் கீழ்க்காணும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.**

- இதனைக் குழுச் செயற்பாடாகச் செய்யவும்
- மாணவர்களைப் பொருத்தமாகக் குழுக்களாகப் பிரிக்கவும்
- இணைப்பு 01 இன் செயலட்டையைக் குழுக்களிடையே பகர்ந்தளிக்கவும்
- அரசியல் சீர்த்திருத்தங்கள் அடங்கி பாட நூல்கள், ஏனைய மூலாதாரங்களை வழங்கவும் (தரம் 9, 11 களின் பழைய பாட்திட்ட நூல்கள், பததிரிகைகள், சஞ்சிகைகள், என்பவற்றை சேகரிக்கும்படி மாணர்களுக்குக் கூறவும்)
- பக்கங்களைப் புரட்டக் கூடியதான 12 மாதங்கள் அடங்கிய கலண்டரை வழங்கவும்
- அதன் ஒரு பக்கத்தின் அளவில் டிமைன் தாள் அல்லது வெள்ளை நிறத்தாள் 6 இனை வெட்டிக் கொள்ளவும்
- சீட்டுக்களில் எழுதிய வட்டமிடப்பட்ட அரசியல் சீரத்த்திருத்தங்கள் 6 இனைக் குலுக்கல் முறையில் தெரிவு செய்ய வாய்ப்பளியுங்கள்
- குழுக்களுக்குக் கிடைத்த தலைப்புகளுக்கு அமைய முக்கிய தகவல்களைக் கலந்துரையாடிக் கோவைப்படுத்தக் குழுக்களுக்கு வழிகாட்டவும்
- வழங்கப்பட்ட டிமைன் அல்லது வெள்ளைத்தாளில் அவற்றை எழுதுவதற்குக் குழுக்களுக்கு வழிகாட்டவும்
- குழுச் செயற்பாட்டை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குவதோடு மாணவரின் செயற்பாட்டைப் பாராட்டவும்
- பக்கங்களைப் புரட்டக்கூடிய கலண்டரின் பொருட்டு முன்பக்க அட்டை ஒன்றைத் தயாரித்து ஒட்டவும்
- உள்ளேயுள்ள பக்கங்களில் (ஒரு பக்கத்தில் ஒன்று என்ற ரீதியில்) வரிசையாக்க குழுக்களின் நிர்மாணங்களை கலண்டரில் ஒட்டவும்)
- கலண்டரைத் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்தவும்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- புரட்டக்கூடிய கலண்டர்/ கலண்டரின் அளவுக்குத் தயாரிக்ப்பட்ட டிமைன் அல்லது வெள்ளைத்தாள் 06
- பாடநூல் மற்றும் பொருத்தமான மூலாதாரங்கள் படங்கள், பிளட்டிக்னம், பசை

**இணைப்பு 01**

| |
|---|
| **செயலட்டை**<br>**பின்வரும் அரசியல் சீர்த்திருத்தங்களின் கீழ் ஒரு அரசியல் சீர்த்திருத்தம் தொடர்பாக விடயங்ளை அட்டவணைப்படுத்தவும்.**<br>• அரசியல் சீர்ததிருத்தம்<br>• அரசியல் சீத்திருத்தத்திற்கான முக்கிய ஆலோசனைகள்<br>• அரசியல் சீர்த்திருத்தங்களின் நன்மை, தீமைகள் |

Draft

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளவும்.

- தலைப்புக்களுக்குப் பொருத்தமான சரியான தகவல்களை சேகரிப்பார்.
- முக்கியமான ஆலோசனைகளைப் பெயரிடுவார்.
- அரசியல் சீர்திருத்தத்தின் நன்மையான, தீமையான இயல்புகளைக் கலந்துரையாடுவார்.
- குழு உணர்வோடு செயற்படுவார்.
- சிறந்த கலண்டர் ஒன்றைத் தயாரிப்பார்.

Draft

## அலகு 9.6 சுதந்திரத்தின் பின்னர் இலங்கை

இலங்கை 150 ஆண்டுகளுக்கு மேலாகப் பிரித்தானியப் பேரரசால் ஆளப்பட்டது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. அத்தோடு இலங்கைக்குப் பாராளுமன்ற ஜனநாயக முறையும் கிடைத்ததால் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரசியலில் தொடர்பு கொள்ள இலங்கையரால் இயலுமானதாக இருந்தது. அதன்படி சுதந்திரத்திற்குப்பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், அவைகளின் வேலைத்திட்டங்கள் என்பன பற்றி சுருக்கமாக இந்த அலகில் முன்வைக்கப்படுகிறது. மேலும் இலங்கை குடியரசானமை, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஆரம்பமாதல், சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி செயற்பாடுகள் என்பன பற்றியும் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

**தேர்ச்சி 6.0** : சுதந்திரத்தின் பின்னர் பெற்ற வெற்றிகளை மதித்து, ஒரு நற்பிரசை என்ற வகையில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார விருத்தியினைக் கற்றாய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை விபரிப்பார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் சமூக நலனோம்பல் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- 1947 ஆம் ஆண்டு முதலாவது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றமை இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தமை
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள் அரசாங்கங்களின் வேலைத்திட்டங்கள்

**1952 ஆம் ஆண்டுத் தேர்தல்**

- ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறல், டட்லி சேனாநாயக்கா அவர்கள் பிரதம மந்திரியாதல்
- இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் என்பன இணைந்து ஹர்த்தால் நடாத்துதல்

Draft

- டட்லி சேனாநாயக்கா அவர்கள் பிரதம மந்திரி பதவிலியிலிருந்து விலகுதல். ஜோன் கொத்தலாவல அவர்கள் பிரதம மந்திரியாதல்
- 1955 ஆம் ஆண்டு இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறல்

**1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்**

- இத் தேர்தல் இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.
- ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மற்றும் கட்சிகள் சிலவற்றுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொண்டமை
- எஸ்.டபிள்யு. ஆர் டி பண்டார நாயக்கா அவரக்ள் தேர்தலின் போது பிக்குமார் வைத்தியர், ஆசிரியர், விவசாயிகள், தொழிலாளிகள் எனும் ஐம்பெரும் சக்திகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்
- மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெறுதல், எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கா அவர்கள் பிரதம மந்திரியாதல்
- மக்கள் ஐக்கிய முன்னனி அரசாங்கத்தால் ஆற்றப்பட்ட முக்கிய பணிகள்
  - உள்நாட்டுக் கைத்தொழிலையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்தல்
  - அரசுடமையாக்கும் செயற்றிட்டத்தை மேற்கொள்ளல்
  - சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டமை

**1960 ஆம் ஆண்டு ஜுலை மாதத் தேர்தல்**

- 1960ஆம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறாததோடு, டட்லி சேனாநாயக்காவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஏனைய கட்சிகள் சிலவற்றை இணைத்துக் கொண்டு அரசாங்கம் ஒன்றினை அமைத்தது. எனினும் பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் தோல்வியடைந்தது. இதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.
- 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றதுடன் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் பிரதம மந்திரியானார்.
- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, கம்மியூனிஸ்ட் கட்சி போன்ற இடது சாரிக்கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய முன்னனி அரசாங்கத்தை அமைத்தது.
  - தேசிய மயமாக்கல் செயற்பாடு முன்னெடுத்துச் செல்லப்பட்டது
  - சுதேச பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடு முன்னெடுத்துச் செல்லப் பட்டது.

**1965 ஆம் ஆண்டுத் தேர்தல்**

- ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றதுடன் டட்லி சேனாநாயக்கா மூன்றாவது முறையாகப் பிரதமரானார்.

**1970 ஆம் ஆண்டுத் தேர்தல்**

- ஐக்கிய முன்னனி அரசு வெற்றியடைந்ததுடன் சிறிமாவோ பண்டார நாயக்கா அம்மையார் பிரதமரானார்.
- 1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசானதோடு, முதலாவது குடியரசு யாப்பு அறிமுகமானது.

Draft

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு 01**

**சுதந்திரத்தின் பின்னர் 1970 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தேர்தல்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்வதில் மாணவரை ஈடுபடுத்தவும்.**

- இதனைத் தனிச் செயற்பாடாகச் செய்யவும்
- மாணவர்களின் செயற்பாட்டை மதிப்பீடு செய்யவும்

| தேர்தல் | வெற்றி பெற்ற கட்சி | நியமனம் பெற்ற பிரதம மந்திரி | தெரிவான அரசாங்கத்தின் மூலம் செய்யப்பட்ட முக்கிய பணிகள் |
|---|---|---|---|
| | | | |

**1972 ஆம் ஆண்டு முதல் குடியரசு யாப்பு**

- இந்த அரசியல் யாப்பின் மூலம்
  - இலங்கை என அழைக்கப்பட்ட எமது நாடு ஸ்ரீ லங்கா என அறிமுகமாதல்
  - பிரித்தானியாவின் அனைத்துக் கட்டுக்களில் இருந்தும் விடுதலை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படல்
  - அரசியல் யாப்பு நாட்டின் மேலாண்மைமிக்க சட்டம் என ஏற்றுக் கொள்ளப்படல்

**1972 ஆம் ஆண்டு யாப்பின் முக்கிய அம்சங்கள்**

- பெயரளவிலான ஜனாதிபதிப் பதவி
- தேசிய அரச பேரவை
- பிரதம மந்திரியை முதன்மையாகக் கொண்ட அமைச்சரவை
- நீதிமன்றத் தொகுதி

**1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு**

- 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றதுடன் அதன் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையுடன் கூடிய அரசியல் யாப்பினை எழுதுவதற்காக நடவடிக்கை எடுத்தார்.
- 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரதான அம்சங்கள்
  - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவி
  - பிரதம மந்திரியும் அமைச்சரவையும்
  - பாராளுமன்றம்
  - நீதிமன்றம்
  - அடிப்படை மனித உரிமைகள்

Draft

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு 02**

**1972, 1978 ஆம் ஆண்டுகளின் குடியரசு அரசியல் யாப்பின் அடிப்படையில் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தவும்.**

- இணைப்பு 01 இல் குறிப்பிடப்படும் அட்டவணையைக் கரும்பலகையில் வரையவும்.
- அட்டவணையின் இடப்பக்கத்தில் தலைப்பு தொடர்பான 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்களில் உள்ள விடயங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவவும்.
- மாணவர்களின் பங்களிப்பை (அவர்களது விடைகளை) அட்டவணையில் குறிக்கவும். அட்டவணையில் குறிப்பதற்கு மாணவர்களையும் ஈடுபடுத்தலாம்.
- பின்னர் குறை நிறைகளை முன்வைத்து 1972, 1978 அரசியல் யாப்புக்களின் வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துக.
- அனைத்து மாணவர்களும் அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**இணைப்பு 01**

| தலைப்பு | 1972 யாப்பு | 1978 யாப்பு |
|---|---|---|
| ஜனாதிபதிப் பதவி | | |
| பிரதம மந்திரியின் தலைமை யிலான அமைச்சரவை | | |
| சட்டத்துறையின் தன்மை (பெயர், பதவிக்காலம், தன்மை) | | |

**கற்றற்பேறுகள்** :

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் சமூக நலனோம்பல் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- அபிவிருத்தி நடவடிக்கைகள்
  - நெற் பயிர்ச்செய்கை
  - கைத்தொழில் வளர்ச்சி
  - கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள்

- சமூக நலனோம்பல்
  - சுகாதார வசதிகளை உயர்த்துதல்
  - வறியோர் நிவாரண முறை
  - கிராமப் புறங்களில் வசதிகளை அதிகரித்தல்

Draft

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் மேறகொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள், நலனோம்பல் நடவடிக்கைகள் என்பன தொடர்பாக கீழ்க்காணும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தவும்

- இதனைத் தனிச் செயற்பாடாக செய்யவும்
- இணைப்பு 02 இல் உள்ள அட்டவணையைக் கரும்பலகையில் எழுதவும்
- அந்த அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் குறித்து நடுவில் இருக்கும் தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களைப் பாடநூலின் அடிப்படையில் தேடி முறையே மூன்று விடயங்களை வலது பக்கத்தில் எழுதும்படி அறிவுரை வழங்கவும்.
- செயற்பாட்டை செய்வதற்குத் தேவையான கால அவகாசத்தை வழங்கவும்
- இந்த செயற்பாட்டை கணிப்பீட்டிற்கு உட்படுத்தவும்
- திறமையான செயற்பாடுகள் சிலவற்றை வகுப்பறையில் முன்வைக்கவும்.

**இணைப்பு 02**

| | **தலைப்பு** | **தலைப்புக்கேற்ற தகவல்கள்** |
|---|---|---|
| அபிவிருத்தி நடவடிக்கை | நெற் பயிர்ச் செய்கையை விருத்தி செய்தல் | 1.<br>2.<br>3. |
| | கைத்தொழில் நடவடிக்கை | 1.<br>2.<br>3. |
| சமூக நலனோம்பல் நடவடிக்கை | கல்வி அபிவிருத்தி நடவடிக்கை | 1.<br>2.<br>3. |
| | சுகாதார வசதிகளை உயர்த்து தல் | 1.<br>2.<br>3. |
| | நிவாரணம் வழங்குதல் | 1.<br>2.<br>3. |
| | கிராமப் புறங்களில் வசதிகளை அதிகரித்தல் | 1.<br>2.<br>3. |